<u>IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM</u>

OS. 71/2023

Deposition of Witness : PW 1

Name : ஏகாம்பரம் (வயது –51 )

Father's Name /W/o : த/பெ ஆறுமுகம்

Religion : இந்து

Caste : –

Calling : –

Address : காஞ்சிபுரம்.

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 14.07.2025.

## <u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

1. என் பாகத்திற்கான சொத்துக்கு நான் தனியாக பட்டா பெற்று விட்டேனா என்றால் இல்லை. எனக்கு பாகத்திற்கு வந்த சொத்தின் பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் முருகன் பெயரில் உள்ளது. அனைத்து சொத்தும் பாகம் பிரித்து தனித்தனியாக அனுபவித்து வருகிறோம் என்றால் சரிதான். மேற்படி சங்கதிகளை வழக்கிலும் வாக்குமூலத்திலும் நான் தெரிவித்துள்ளேனா என்றால் இல்லை .

2. பிரதிவாதி பதிலுரையில் 1984 ஆம் ஆண்டு பாகமானதை மறுத்து என் தாவாவில் தெரிவித்துள்ளேனா என்றால் இல்லை. 2002 இல் தான் பாகமானது. 1978 ஆம் ஆண்டு பாகம் பிரிக்காத சொத்தில் தான் அடமானம் வைத்தார்கள் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ – 6 இன் நகல் தான் தாக்கல் செய்துள்ளேன் அசல் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ – 6 யார் பெயரில் உள்ளது என்றால் முருகன்(என் மூத்த சகோதரன்) பெயரில் உள்ளது.

3. மேற்படி முருகன் 2 மற்றும் 3 ஆம் பிரதிவாதி பெயருக்கு செட்டில்மெண்ட் எழுதி கொடுத்தார் என்றால் சரிதான். எங்களுக்கு தெரியாமல் எழுதி கொடுத்தார். மேற்படி செட்டில்மெண்ட் படி 2 மற்றும் 3 பிரதிவாதிகள் தான் அனுபவத்தில் இருந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்து மற்றும் இதர சொத்துக்கள் பாகம் பிரிக்கப்பட்டு முதல் பிரதிவாதிக்கு பாகம் பிரித்ததிலிருந்து செட்டில்மெண்ட் எழுதப்பட்டது அதனால் என்னால் உரிமை கோர முடியாது என்றால சரியல்ல. அதனால் தான் என் பிரமாண பத்திரத்தில் அனுபவித்து வந்தோம் என்று தெரிவித்துள்ளேன் என்றால் பிரமாண பத்திரத்தில் அப்படிதான் தெரிவித்துள்ளது . ஆனால் நான் அனுபவத்தில் உள்ளேன்.

4. தாவாவில் கோரியுள்ள பரிகாரங்கள் எதுவும் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றாலும் தாவாவை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**(2 மற்றும் 3 பிரதிவாதி வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)**